செ.வெ.எண்.18 நாள்.07.04.2018

திருநெல்வேலி மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் டெங்கு காய்ச்சல் தடுப்பது குறித்து ஊராட்சி செயலர்கள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குநர்களுக்கு மண்டல அளவிலான விழிப்பு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், ஊரக வளர்ச்சித் துறை மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் டெங்கு காய்ச்சல் தடுப்பது குறித்து ஊராட்சி செயலர்கள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குநர்களுக்கு மண்டல அளவிலான விழிப்பு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (07.04.2017) நடைபெற்றது.

கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரவாமல் டெங்கு கொசுக்களை ஒழிக்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. டெங்கு கொசுக்களின் இனப் பெருக்கத்தை கட்டுப்படுத்துதல் மூலம் முழுமையாக ஒழிக்க முடியும். இதில் ஊராட்சி செயலர்கள், சுகாதாரத் துறை களப்பணியாளர்கள், கிராம ஊராட்சிகளின் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பம்பு ஆப்ரேட்டர்கள் ஆகியோரின் பங்கு முக்கியமானதாகும். முறையான விழிப்புணர்வு மூலமும், பராமரிப்பு மூலமும் கட்டுப்படுத்த முடியும். குடிநீரில் குளோரின் அளவை சரியாக இருக்குமாறு பார்த்து கொள்ள வேண்டும். போர்வெல் மூலம் வழங்கப்படும் குடிநீரிலும் சரியான அளவு குளோரின் கலக்க வேண்டும். இப்பணிகளை மிக சரியாக செய்திட வேண்டும். ஊரக வளர்ச்சி துறையின் மூலம் கொசு ஒழிப்பு பணியாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் மூலமும் தூய்மை பணிகளையும், கொசு ஒழிப்பு பணிகளையும் சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். சுகாதாரத்தை மேம்படுத்திட அனைத்து வீடுகளிலும் தனிநபர் கழிப்பிடங்களை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். திறந்தவெளி கழிப்பிடங்கள் இல்லாத நிலையினை ஏற்படுத்திட வேண்டும். சுகாதார பழக்க வழக்கங்களை பொதுமக்களுக்கு கற்று தருவதன் மூலம் சுகாதாரம் மேம்படுத்துவதுடன் மற்ற வேறு பல நோய்களும் கட்டுப்படுத்தப்படும். டெங்கு காய்ச்சல் உயிர்க்கு ஆபத்துள்ள நோய் ஆகும். இது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்திட வேண்டும். பன்றி காய்ச்சலும் ஒரு சில பகுதிகளில் அறிகுறிகள் உள்ளது. இதுபோன்ற நோய்களிலிருந்து காக்க விழிப்புணர்வு அவசியம். களப்பணியாளர்கள் தினமும் விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்ள வேண்டும். இத்துடன் கொசு ஒழிப்பு பணிகளையும் மேற்கொள்ள வேண்டும். கொசு அதிகமாக உள்ள பகுதிகளின் வீடுகளுக்குள்ளும் கொசு மருந்து புகை அடிக்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அனைத்துப் பணியாளர்களும் ஒருங்கிணைந்து இப்பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

இது பொதுமக்களுக்கு மட்டுமின்றி நமக்கும், நமது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் இந்த நோய்கள் பரவாமல் தடுக்கும் வகையில் தீவிரமாக பணிகளை மேற்கொள்ள வேண்டும். அனைவரும் ஒருங்கிணைந்து திருநெல்வேலி மாவட்டத்தில் டெங்கு நோய் தாக்கம் இல்லை என்ற நிலையை ஏற்படுத்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இக் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், உதவி ஆட்சியர் (பயிற்சி) திருமதி.தி.சாருஸ்ரீ,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர் மரு.இளங்கோவன், துணை இயக்குநர்கள் (திருநெல்வேலி) மரு.ராம்கணேஷ், (சங்கரன்கோவில்) மரு.செந்தில்குமார், ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.கல்யாணசுந்தரம், திருநெல்வேலி மாநகராட்சி நகர்நல அலுவலர் திரு.பொற்செல்வன், மாவட்ட கல்வி விரிவாக்க அலுவலர் திரு. அப்துல்காதர் மற்றும் சுகாதாரத் துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.